# தருமபுரி மாவட்டம்

## தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் திருமதி. அர்ச்சனாபட்நாயக், இ.ஆ.ப., மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., ஆகியோர் ஆய்வு செய்தார்கள்.



தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் திருமதி.அர்ச்சனாபட்நாயக், இ.ஆ.ப அவர்கள் தோட்டக்கலை திட்டம் மற்றும் பாரத பிரதமரின் நுண்ணீர் பாசனம் குறித்து ஆய்வு மேற்கொண்டார். மொரப்பூர் வட்டாரம் ஜடையம்பட்டி கிராமத்தில் 2015-2016-ம் ஆண்டு பொருத்தப்பட்ட நுண்ணீர் பாசனம் குறித்து ஆய்வு செய்தார், நுண்ணீர் பாசனத்தின் பயன்பாடுகள் அரசு மானிய விபரம் மற்றும் நன்மைகள் குறித்து பயனாளியிடம் கேட்டறிந்தார்.

பின்பு அரசு தோட்டக்கலை பண்ணை போளையம்பள்ளியில் தோட்டக்கலைத்துறை இயக்குநர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. கே.விவேகானந்தன் அவர்கள் இணைந்து தோட்டக்கலை பண்ணையிலிருந்து உற்பத்தி செய்து விநியோகம் செய்யகூடிய குழித்தட்டு வீரிய ஒட்டு தக்காளி நாற்றுகள், கத்திரி நாற்று, மாமெண்தண்டு ஒட்டு போன்ற பணிகளை நேரில் ஆய்வு மேற்கொண்டார். மேலும் தோட்டக்கலை இயக்குநர் திருமதி.அர்ச்சனாபட்நாயக், இ.ஆ.ப., மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. கே.விவேகானந்தன் ஆகியோர் பழ மரக் கன்றுகள் நடவு செய்தனர்.

பாரத பிரதம மந்திரியின் பயிர் காப்பீடு திட்டத்தில் தோட்டக்கலை பயிர்கள் சாகுபடி செய்யும் விவசாயிகளை அனைவரும் திட்டத்தில் பயன்பெறுமாறு அறிவுறுத்தினர். 2014-2015, 2015-16-ம் ஆண்டில் பாரத பிரதம மந்திரியின் நுண்ணீர் பாசன திட்டத்திற்காக ரூ. 6 கோடி ரூபாய் பெறப்பட்டுள்ளது. இந்நிதியினை ஆதிதிராவிடர் இனத்தினர் பயன்பெறும் வகையில் விழிப்புணர்வு ஏற்படுத்தி பயன்பெற அனைத்து முயற்சியும் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று கூறினார்கள்.

மாண்புமிகு தமிழக முதல்வர் அறிவிப்பு செய்த வத்தல் மலையில் தாவரவியல் பூங்கா பணிகள் மேற்கொள்ள முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் தோட்டக்கலை இயக்குநர் தெரிவித்தனர்.

தருமபுரி வட்டாரம் மூக்கனூர் வருவாய் கிராமத்திற்குட்பட்ட செம்மணஹள்ளியில் 75மூ மான்யத்தில் நுண்ணீர் பாசனம் அமைத்த திரு. அத்தியப்ப கவுண்டர் தோட்டத்தை பார்வையிட்டனர். மரவள்ளி பயிரின் மகசூல் மற்றும் சந்தை நிலவரத்தையும் கேட்டறிந்தனர், பிறகு தோட்டக்கலை துணை இயக்குநர் அலுவலகத்தில் திட்ட முன்னேற்றங்கள் குறித்து வட்டாரம் வாரியாக ஆய்வு மேற்கொண்டார். இதில் தோட்டக்கலை துணை இயக்குநர், தோட்டக்கலை உதவி இயக்குநர் தோட்டக்கலை அலுவலர்கள் உதவி தோட்டக்கலை அலுவலர்கள் அனைவரும் பங்கேற்றனர்.

ஆய்வு கூட்டத்தை முடித்து கொண்டு பாப்பிநாயக்கனஹள்ளி வருவாய் கிராமத்திற்குட்பட்ட ஆட்டுகாரம் பட்டியில் உள்ள பசுமை குடிலில் ரோஜாபூ சாகுபடி செய்யும் திரு. சிவமணி, திரு. கேசவன் ஆகியோர் பசுமை குடிலை பார்வையிட்டார். அப்போது ரோஜா பூ பதப்படுத்த குளிர் சாதன அறை ஒன்றுதோட்டக்கலை துறைமூலம் வழங்க ஆவண செய்யுமாறு திரு. சிவமணி இயக்குநரிடம் கேட்டுக் கொண்டார்.

100மூ மானியத்தில் நுண்ணீர் பாசனம் அமைத்த திருமதி. ராஜம்மாள், மாது ஆகியோர் தோட்டத்தை பார்வையிட்டார். பிறகு காரிமங்கலம் ஒன்றியத்தில் உள்ள பசுமை குடில் மூலம் குடைமிளகாய் சாகுபடி செய்த விவசாயிகளை நேரில் ஆய்வு மேற்க்கொண்டார்.

இவ்வாய்வின் போது தோட்டக்கலை துணை இயக்குநர் திரு. ப. அண்ணாமலை, உதவி தோட்டக்கலை இயக்குநர் (நடவுபொருள்) திரு. சத்திவேல், வட்டார தோட்டக்கலை உதவி இயக்குநர் திரு. கே. ராஜன் மற்றும் தோட்டக்கலை அலுவலர்கள், உதவி தோட்டக்கலை அலுவலர்கள் உட்பட பலர் உள்ளனர்.

---

வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி.